MediaLiteracyCouncilSG

www.betterinternet.sg



Organised by: MEDIA LITERACY COUNCIL

Supported by: INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | NATIONAL CRIME PREVENTION COUNCIL | pdpc PERSONAL DATA PROTECTION COMMISSION SINGAPORE

In association with: SG:D | GET READY!



## பாதுகாப்பாக இருங்கள்

# இணையத்தில் பொதுவான ஊழல்கள் தொடர்பான ஆலோசனைகள்



## இணையத்தில் சரியானதைக் கடைப்பிடியுங்கள்

- வலுவான மறைச்சொற்களை **உருவாக்கவும்**
- தனிப்பட்ட தகவல்களைப் **பாதுகாக்கவும்**
- **சரிபார்த்துவிட்டு** ‘கிளிக்’ செய்யவும்

**CHECK Please!**

Be Safe. Be Smart. Be Kind.

## நம்பி ‘கிளிக்’ சசய்யும்முன்,

# அன்புகூர்ந்து சரிபார்க்கவும்!



**நீங்கள் இணையத்தில் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்க எங்கள் 7 ஆலோசனைகள் அடங்கிய பட்டியல்**

## 01 வினோதமான அழைப்புகளைப் பற்றி ஜாக்கிரதை

வினோதமான அழைப்புகள் இணையம்வழியிலான ஊழல்கள் அல்ல. எனினும், அவை சிங்கப்பூரில் பொதுவான ஊழல்களில் ஒன்று. ஏமாற்றுப்பேர்விழிகள் அழைப்புகள் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்களையோ பணத்தையோ பெற முயல்வர். அவர்கள் நட்பாகவோ மிரட்டியோ பேசலாம்; உங்களைப் பற்றிய தகவல்களைச் சமூக ஊடகம் மூலம் தெரிந்திருக்கலாம். உடனே அழைப்பைத் துண்டித்துவிட்டுத் தொடர்புடைய அமைப்புடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அழைப்பு விடுத்தது அவர்களா என்று கண்டறியுங்கள்.

## 02 உங்கள் தனிப்பட்ட தகவல்கள் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள்

இணையத்தில் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வது பற்றிக் கவனமாக இருங்கள். பொதுவாகக் கிடைக்கக்கூடிய தகவல்கள் எப்படி, எப்போது பயன்பாடாகும் என்று நிர்வகிப்பது கடினம்.

## 03 சந்தேகத்துக்குரிய ரசீதுகள் சரிபார்க்கவும்

நீங்கள் அஞ்சல்வழி அல்லது இணையம்வழி வாங்காத பொருளுக்கோ சேவைக்கோ விலைப்பட்டியலைப் பெற்றால், வழங்குபவரிடம் நேரடியாகச் சரிபார்க்கவும். இந்தப் போலியான ரசீது ஊழல்கள், உங்களைப் போலியான இணைத்தளங்களுக்கு வழிநடத்தி, உங்கள் கணக்கு விவரங்கள் மூலம் உங்கள் கொள்முதல்களைச் சரிபார்க்கச் செய்யும்.

## 04 யாராவது உங்களிடம் பணம் கேட்டால் கவனமாக இருங்கள்

நேரில் சந்திக்காத ஒருவரை நம்புவதில் கவனம். பணம் மூலம் ஆதரவை நாடுவதைவிட மனத்தளவில் ஆதரவை நாடுங்கள்.

## 05 அடை அணிந்திருங்கள்

உங்களை வற்புறுத்தியோ மிரட்டியோ வெளிப்படையான படங்கள் மற்றும் காணொளிகள் அனுப்பும் சூழல் ஏற்பட்டால், ஏமாற்றுப்பேர்விழிகள் அதைப் பகிர்வதாக மிரட்டி உங்களிடம் மீட்புப்பணம் பெறலாம். அதனால், அறிமுகமில்லாதவர்களிடமிருந்து நட்பார்ந்த கோரிக்கைகள் ஏற்பதில் கவனம். உரையாடல் சங்கடமாக மாறினால், எல்லாவித தொடர்புகளையும் நிறுத்திவிடுங்கள்.

## 06 நீங்கள் எதற்குப் பதிந்துகொள்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ளவும்

சில நிறுவனங்கள் சற்று விலை மலிவான சேவை அல்லது சோதனைக்கு உங்களுடைய அட்டைகளின் விவரங்களைக் கேட்டுக்கொண்டு பின்னர் சந்தா கட்டணம் வசூலிப்பர். அவ்வாறான நிறுவனங்களைப் பற்றிய விமர்சனங்கள் மற்றும் அவர்களது விதிமுறைகள், நிபந்தனைகளைப் படித்துவிட்டுப் பதிந்துகொள்ளவும். சந்தா கட்டணங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்று உங்கள் வங்கிக் கணக்கு அறிக்கைகளை அடிக்கடி பரிசீலனை செய்யுங்கள்.

## 07 நல்ல இணைய பழக்கங்களை வளர்த்துக்கொள்ளுங்கள்

சொந்த தகவல்களைப் பகிரும் முன், மூலத்தைச் சரிபார்க்கவும். வலுவான மறைச்சொற்களை உருவாக்கி அவற்றை அடிக்கடி மாற்றும் வழக்கத்தை வைத்துக்கொள்ளவும்.